**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 399 Of 2024

(Old O.S. 679 Of 2019)

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18- வது நாள் செவ்வாய்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பாலாகுமார் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. கோபாலன் | வேலை: | Senior Manager (Accounts)/ Power Agent. M/s. ஜீனா & கம்பெனி. |
| வயது | 47 | செல்போன் எண் | |

வா.சா.1 **திரு. பாலாகுமார்** ஆக 18.11.2025 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள்

உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 14.12.2021 - பொது அதிகார பத்திரம் - சான்றிட்ட நகல் - **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 27.03.2004 – கூட்டாண்மை நிறுவன பத்திரம் - சான்றிட்ட நகல் - **Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. GST பதிவு சான்று - இணையதள பதிவிறக்கம் - **Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. நிறுவன பதிவு சான்று - சான்றிட்ட நகல் - **Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 19.04.2017 – இரண்டாம் பிரதிவாதி கொடுத்த Shippers letter of instructions - அசல் - **Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. 21.04.2017 – எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுத்த விலைப்பட்டியல் Invoice - அசல் - **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. 11.01.2019 – வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் - **Ex.A7** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. ஒன்றாம் பிரதிவாதியின் அலுவலக முகவரிக்கு அனுப்பிய திருப்பப்பட்ட அறிவிப்பு அஞ்சல் - அசல் - **Ex.A8** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

9. 19.04.2017 – இரண்டாம் பிரதிவாதிக்கு அலுவலக முகவரிக்கு அனுப்பிய திருப்பப்பட்ட அறிவிப்பு அஞ்சல் - அசல் - **Ex.A9** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

10. மூன்றாம் பிரதிவாதிக்கு அலுவலக முகவரிக்கு அனுப்பிய திருப்பப்பட்ட அறிவிப்பு அஞ்சல் - அசல் - **Ex.A10** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

11. நான்காம் பிரதிவாதிக்கு அலுவலக முகவரிக்கு அனுப்பிய திருப்பப்பட்ட அறிவிப்பு அஞ்சல் - அசல் - **Ex.A11** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

12. ஒன்றாம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றதற்கான ஒப்புகை அட்டை - அசல் - **Ex.A12** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

13. இரண்டாம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றதற்கான ஒப்புகை அட்டை - அசல் - **Ex.A13** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

14. நான்காம் பிரதிவாதி அறிவிப்பு பெற்றதற்கான ஒப்புகை அட்டை - அசல் - **Ex.A14** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

15. மூன்றாம் பிரதிவாதிக்கு அனுப்பி திருப்பப்பட்ட அஞ்சல் உரை - அசல் - **Ex.A15** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

16. 20.12.2018 - மின் அஞ்சல் (இணையதள பதிவிறக்கம்) - அசல் - **Ex.A16** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

17. 14.06.2019 – Statement of bank realisation (இணையதள பதிவிறக்கம்) - அசல் - **Ex.A17** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

18. 14.06.2019 - Statement of bank realisation (இணையதள பதிவிறக்கம்) - அசல் - **Ex.A18** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் Mcom படித்துள்ளேன். எப்போதிலிருந்து இந்த நிறுவனத்தில் பணியாற்றி வருகிறீர்கள் என்றால் கடந்த 2020 ஜனவரியில் இருந்த பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்பு எந்த நிறுவனத்தில் பணியாற்றினீர்கள் என்றால் DASCHER India Pvt ltd., என்ற நிறுவனத்தில் Team Leader (Accounts) ஆக பணியாற்றினேன். DASCHER India Pvt ltd., என்ன தொழில் செய்து வந்தது என்றால் FREIGHT service செய்து வந்தது. வாதி நிறுவனம் என்ன தொழில் செய்து வருகிறது என்றால் Customs Clearance மற்றும் freight fowarding service செய்து வருகிறது. தாவா பிராது மற்றும் வழக்கு விவரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். பிராது யார் கையொப்பம் இட்டுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் வாதி நிறுவனத்தின் கிளை மேலாளர் சுவாமிநாதன் என்பவர் கையொப்பம் இட்டு பிராது தாக்கல் செய்துள்ளார். அவர் தற்சமயம் வாதி நிறுவனத்தில் பணிபுரிகிறாரா என்றால் இல்லை, அவர் ஓய்வு பெற்றுவிட்டார். வாதி நிறுவனம் ஒரு கூட்டாண்மை நிறுவனம் ஆகும். அதில் எத்தனை பங்குதாரர்கள் உள்ளனர் என்றால் 5 பேர் உள்ளனர். அவர்கள் தற்சமயம் இருக்கிறார்கள். வாதி நிறுவனம் எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் வாதி நிறுவனம் பழைய நிறுவனம் ஆகும், அது எப்போது பதிவு செய்யப்பட்டது என்பது எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 அதிகார ஆவணத்தில் ஒரு பங்குதாரர் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். 27.03.2004 தேதியிட்ட வா.சா.ஆ.2

கூட்டாண்மை நிறுவன பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 29.04.1992 தேதியிட்ட கூட்டாண்மை நிறுவன பங்கு பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உங்களுக்கு Mr. Homi Adi Katgara என்பவர் அதிகாரம் கொடுத்துள்ள நிலையில் வாதி நிறுவனத்தின் மற்ற பங்குதாரர்கள் Mr. Homi Adi Katgaraக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் தாவா வழக்கிற்கு ஆஜராகி சாட்சியம் அளிக்க குறிப்பிட்டு அதிகாரம் அளிக்கப்பட்டதாக சரத்துகள் இல்லை என்றால் சரிதான், பொது அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் உங்களுக்கு அதிகாரம் கொடுக்க Mr. Homi Adi Katgaraக்கு அதிகாரம் இல்லை என்ற காரணத்தினால், வா.சா.ஆ. 1ன் அடிப்படையில் இந்த வழக்கில் ஆஜர் ஆகி வாதி நிறுவனத்தின் சார்பில் சாட்சியம் அளிக்க உங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை, உங்கள் சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. உங்களுக்கு அதிகாரம் கொடுத்த Mr. Homi Adi Katgara என்பவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலுமா என்றால் முடியும், மற்ற பங்குதாரர்களும் சாட்சியம் அளிக்க இயலுமா என்றால் இயலும். உங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, வணிக விதிமுறைகள் தெரியுமா, பரிட்சையமா என்றால் தெரியும். வாதி நிறுவனம் வெளிநாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முன் வாடிக்கையாளர்களிடம் இருந்து அனைத்து அசல் ஆவணங்கள் பார்த்து தான் அனுப்பிவீர்களா என்றால் ஆமாம். 19.04.2017 தேதியிட்ட வா.சா.ஆ.5 Shippers letter of instructions படி UK நாட்டிற்கு பிரதிவாதி நிறுவனம் 242 பெட்டிகள் (Cartons)/ 163 Packages அனுப்புவதற்கு அளிக்கப்பட்டது என்றால் 242 பெட்டிகள் அளிக்கப்பட்டது. வா.சா.ஆ.5ல் 4 விதமான items விவரிக்கப்ட்டுள்ளது என்றால் சரிதான், நாங்கள் Cartonல் உள்ள சரக்குகளை பார்ப்பதில்லை. Cartonsல் உள்ள அனைத்து பொருட்களின் Invoice கள் வாதி நிறுவனத்திடம் கொடுக்கப்படும் என்றால் சரிதான். Invoiceன் அடிப்படையில் தான் சுங்கவரி தீர்வை (Customs Clearance) ஏற்படும் என்றால் சரிதான். அதேபோல் GSP (Generalised system preference) Certificate கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். GSP (Generalised system preference) அடிப்படையில் வெளிநாடுகளில் சரக்கு எடுப்பவர்கள் வரிச்சலுகைகள் பெறுவார்கள் என்றால் சரிதான். அதேபோல் Country of Origin சான்றிதழ் அளிக்கப்பட்டது என்றால் GSP (Generalised system preference) Certificate உடன் கொடுக்கப்பட்டது. Invoice, Packing list அடிப்படையில் Air way bill தயார் செய்யப்படும், Customs Clearance மேற்கொள்ளப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் மேற்சொன்ன அனைத்து கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிநாட்டிற்கு பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் எந்த தேதியில் invoice ஏற்படுத்தி பொருட்களை ஏற்றுமதி செய்தீர்கள் என்றால் பிரதிவாதி நிறுவனத்தின் invoice தேதி 19.04.2017, Master Air way bill 20.04.2017

ல் ஏற்படுத்தப்பட்டது, வாதி நிறுவனத்தின் invoice 21.04.2017 தேதியிட்ட வா.சா.ஆ.6 ஆகும். பிரதிவாதி நிறுவனம் சார்பாக வாதி நிறுவனம் அனுப்பிய பொருட்களை எந்த தேதியில் Mackays நிறுவனத்தால் பெறப்பட்டது என்றால் 20.04.2017 ல் இருந்து 4 அல்லது 5 நாட்களில் Mackays நிறுவனம் பொருட்களை பெற்றிருக்கும், சரியான தேதி ஞாபகமில்லை. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு தேவையான GSP, Invoice, CO போன்ற அனைத்து அசல் ஆவணங்களும் Mackays நிறுவனத்திற்கு வாதி நிறுவனம் மூலம் கிடைக்காமல் போன காரணத்தினால் வா.சா.ஆ.5 ன் அடிப்படையில் அனுப்பப்பட்ட பொருட்களை Mackays நிறுவனத்தால் எடுக்க முடியாமல் போனதால், பிரதிவாதி நிறுவனம் இழப்பீடாக Mackays நிறுவனத்திற்கு 6,000 Pounds செலுத்தி உள்ளது என்றால் சரியல்ல, ஏற்றுமதி செய்யப்படும் சமயத்தில் Air way bill உடன் வா.சா.ஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள அசல் ஆவணங்கள் அனைத்தும், சேர்த்து கொடுக்கப்பட்டது, அவை முறையே delivery எடுக்கப்படும் இடத்திற்கு சேர்த்து அனுப்பப்படும், Delivery இடத்தில் Air line ல் இருந்தோ அல்லது பிரதிவாதியோ அசல் ஆவணங்கள் போய் சேரவில்லை என எங்களுக்கு தெரியப்படுத்தவில்லை, 2017 ஜீன் மாதத்தில் தான் GSP/ Short document என்ற காரணத்தினால் Mackays நிறுவனம் பொருட்களை எடுக்கவில்லை என பிரதிவாதி நிறுவனம் தெரிவித்தது. நீங்கள் Air line க்கு ஆவணங்கள் Misplace செய்யப்பட்ட விவரத்தை தெரிவித்தீர்களா என்றால் நாங்கள் கேட்ட போது பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து ஆவணங்கள் Misplace செய்யப்பட்டதாகவோ அல்லது Short document என்றோ Airlines யிடம் எந்த தகவலோ அல்லது புகாரோ வரவில்லை என தெரிவித்தார்கள். நீங்கள் மேற்சொன்ன சங்கதிகளுக்கு எழுத்துபூர்வமான ஆவணம் ஏதேனும் உள்ளதா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை எனக்கு அதைப்பற்றி சரியாக தெரியாது, பார்த்து தான் சொல்ல இயலும். வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.11.18 18:02:38 +0530

**Judge,**
**Commercial Court,**
**(Senior Civil Judge Cadre),**
**Coimbatore.**